[1987 நவம்பர் 16

150 — வினா 12791—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம் முத்தூர்-கொட விளாகம் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கப்பிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை —

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

[குறிப்பு— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

திரு. கி. மனோகரன் : பாயின்ட் ஆப் ஆர்டர் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் எழுதி அனுப்பியிருந்தீர்கள். அதை நான் பார்த்தேன், அவ்வளவுதான். (குறுக்கீடு) நீங்கள் என்னைப் பார்க்காமலேயே அதைக் கொடுத்து அனுப்பினீர்கள்.

திரு. கி. மனோகரன் : இலங்கையில் தமிழ் ஈழப் பகுதியில் இந்திய அரசு உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இந்த அவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்ற . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நீங்கள் இங்கே படிப்பது சரியில்லை. (குறுக்கீடு), நீங்கள் என்னிடம் கொடுக்கவில்லை. தபாலிலே கொடுத்தீர்கள். என்னைப் பார்க்கவில்லை. என்னுடைய அனுமதியையும் பெறவில்லை.

1987 நவம்பர் 16]

திரு. இ. மனோகரன் : உங்களிடம் கொடுத்தால் என்ன உங்கள் செயலாளரிடம் கொடுத்தால் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செயலாளர் அனுமதி வழங்க முடியாது. நான் தான் வழங்க முடியும். இதற்கு அனுமதி இல்லை என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் உங்களிடம் (குறுக்கீடு). இதைப் பற்றி நீங்கள் தினமும் கொடுத்துக் கொண்டு வருகிறீர்கள். ஒரு நேரம் தள்ளுபடி யானால் இன்னொரு நேரம் கொடுக்கக் கூடாது என்று ''ரெஸ்ஜுடிகேட்டா'' இங்கே கொண்டு வரவேண்டியதுதான்.

(ஆ) சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத்தலை வர் அவர்களே, இன்று சபை நடவடிக்கையில் ஏறத்தாழ 8 சட்ட முன் வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன. சட்ட முன் வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டால் 5 நாட்கள் தவணை கொடுக்க வேண்டும் என்ற ஒரு முறை இருப்பதாக நான் அறிகிறேன். ** மறுநாளே சட்ட முன் வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறீர்கள். இது சரிதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதிக்கப்பட்டு, இன்றைக்கு அரசு அலு வல்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று எல்லோரும் ஒத்துக் கொண்டதுதான். இந்த 5 நாட்களைப் பற்றி அங்கே நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு),** இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதித்த பிறகு இங்கே விவாதிப்பது முறையல்ல. அங்கேயே ஒத்துக் கொண்ட விவகாரங்கள்தான் இவைகள். (குறுக்கீடு), இதற்கு நாம் என்ன செய்ய முடியும். நீங்கள் உட்கார்ந்து படிக்க வேண்டும். உங்களுக்கு டியூசன் சொல்லித் தர முடியுமா? அமருங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : நீங்கள் அதைச் சொல்ல வேண்டாம் சார். 5 நாள் டைம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் இது பற்றி பேசி யாகிவிட்டது. அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதித்தாகி விட்டது. உங்களுக்கும் நான் சொல்லி விட்டேன். (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(அ) இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து —தொடர்ச்சி.

திரு. கி. மனோகரன் : நாடாளுமன்றத்திலே, நான் எழுப்பியதைப் பற்றி விவாதிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாடாளுமன்றத்திலே பதில் சொல்வதற்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். இது வெளி விவகாரத் துறை சம்பந்தப்பட்டது.

திரு. கி. மனோகரன் : நீங்கள் அலவ் பண்ண மாட்டீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அலவ் பண்ணவில்லை. இதைப் பற்றியெல்லாம் என்னிடம் கேட்க வேண்டாம். என் சம்பந்தப்பட்டவற்றை மட்டும் கேளுங்கள். ஏற்கனவே இதைப் பற்றி உங்களிடம் நான் சொல்லிவிட்டேன்.

திரு. கி. மனோகரன் : எனக்கு பாதுகாப்பு நீங்கள்தானே, வேறு யார் இருக்கிறார்கள் ? உங்களிடம் தான் கேட்க முடியும். (குறுக்கீடு). இவ்வளவு பெரிய முக்கியமான பிரச்சினை பற்றிப் பேசக்கூடாது என்று சொல்கிறீர்களா ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போகிறவர்கள் நேராகப் போய் விடலாம். நான் ஏற்கெனவே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். விவாதம் இல்லையென்று, (குறுக்கீடு). நீங்கள் காலையிலே கொடுத்து இருக்கிறீர்கள். அதற்கு அனுமதி பெறவில்லை. நான் பாயின்ட் ஆப் ஆர்டருக்கும் அனுமதிக்கவில்லை.

(ஆ) சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவேவஅலுல் ஆய்வுக் குழுவில் நாம் விவாதித்து முடிவு எடுத்தது பற்றிப் பேச வேண்டாம். திரு. ஆறுமுகம் உட்காருங்கள். (குறுக்கீடு) ** இப்படிப் பேசுவது பாராளுமன்ற முறைக்கு, உண்மையிலேயே உகந்தது அல்ல. அதை நீங்கள் பேசும் போதே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். ** நீங்கள் செய்வதைக் கூடச் சொல்லக் கூடாது. இது பாராளுமன்ற முறைக்கு உகந்தது அல்ல. ** அதைச் சொல்லக் கூடாது**என்று சொல்வது பாராளுமன்ற முறையல்ல. ''You are supposed to know everything'' அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுகிறேன். அது இருக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) உறுப்பினர்களுடைய தகுதியைக் குறைத்து விடாதீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1987 நவம்பர் 16]

(அ) இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து—தொடர்ச்சி

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய வார்த்தைகள் ஒன்றும நீக்கப்படவில்லை. அவ்வளவுதான் செய்ய முடியும். ஏற்கனவே அனுமதியில்லை என்றால் அதை நீக்கி விடுவேன். அதை நீக்கவில்லை. இதிலிருந்து புரிந்து கொள்ளுங்கள்.

திரு. கி. மனோகரன்: 'ரெக்கார்டு பர்பசுக்காகச்' சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அனுமதியில்லை என்றால் நீக்குவது வழக்கம். ஆனால் இங்கே நான் அதை நீக்கவில்லை. (குறுக்கீடு) என்னுடைய உணர்வு தான் காரணம். அந்த உணர்வு இருக்கக் கூடாது என்று 'nobody can compel me'

திருமதி டி. யசோதா: உங்களுடைய உணர்வைக் காட்டுவதற்கு நீங்கள் தினமும் அனுமதித்து, பிறகு நீக்கிவிடுகிறீர்கள். அதற்கும் இந்த உணர்வு தான் காரணமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அப்படிக் கேட்பது முறையல்ல. என்னுடைய உணர்வை வெளிப் படுத்த வேண்டிய நேரத்தில் வெளிப் படுத்துவேன். வேண்டாத நேரத்தில் வெளிப்படுத்த மாட்டேன். அது என்னுடைய உரிமை. மனிதனுடைய உரிமை.

திருமதி டி. யசோதா : எல்லா நேரத்திலும் எங்களுடைய உரிமையை நிலை நாட்டுவதில்லை. வன்னியர் பிரச்சினை, ஆதி திராவிடர் பிரச்சினை பற்றி, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றி வெளிக் காட்ட முடிவதில்லை. அதைக் கேட்க முடிகிறதா ? அதே நேரத்தில் உங்களுடைய உணர்வைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அந்தப் பிரச்சினையைப் பற்றி எழுதிக் கொடுக்கலாம். என்னென்ன குறைபாடுகள் இருந்தாலும், அதை நான் பார்க்கிறேன். அதிலே ஒன்றும் உணர்வு அல்ல.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1987 நவம்பர் 16

திரு. கி. மனோகரன் : எங்களுடைய உணர்வைத் தெரிவிக்கக் கூடிய நேரம் என்று வரும் என்று தெரியவில்லை. *** இந்த விஷயத்தில். எனவே நாங்கள் வெளியேறுகிறோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைச் சொல்லக் கூடாது கேட்டுத்தான் இருக்கிறீர்கள். ** என்ற வார்த்தையைச் சொல்லக்கூடாது.

திரு. கி. மனோகரன் : எங்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாதுகாப்பு கொடுத்து கொண்டுதான் இருக்கிறேன்.

திரு. கி. மனோகரன்: இதை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

(முற்பகல் 11-10)

3. விதி 111-ன் கீழ் உள்ளாட்சித்துறை அமைச்சரின் அறிக்கை—

நகராட்சிகள், மாநகராட்சிகளில் சொத்து வரி சீரமைப்பு குறித்து.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் கடந்த சுமார் 15 ஆண்டுகளாக சொத்து வரிப் பொது சீராய்வு செய்யப்படவில்லை. இதற்கான முக்கிய காரணம் நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் செயல்படாததே. 1986-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நகராட்சி தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்றனர். எனவே, நகராட்சிகளில் பொதுச் சொத்து வரி சீராய்வு செய்வதற்கு அரசு ஆணையிட்டது. சிறப்பு சீராய்வு அலுவலர்களை நியமித்து சொத்து வரி சீராய்வுப் பணியினைத் தொடங்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. இவ்வலுவலர்கள் மேற்கொண்ட சொத்து வரி திருத்தம் மிக அதிகமாக இருப்பதாக மக்களிடமிருந்து புகார்கள் வரவே, அரசு, சிறப்பு சீராய்வு அலுவலர்கள் மேற் கூறிய பணியினைத்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.